**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஒட்டன்சத்திரம்**

முன்னிலை : **திரு.S.பிரவீனா,M.A.,L.L.M.,**

நீதித்துறை நடுவர், ஒட்டன்சத்திரம்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**S.T.C.No.1145/2017**

( CNR.No. TNDG13-000868/2017)

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
சத்திரப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.235/2016 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

ராமசாமி (39/2016), த/பெ.ராஜூ,
வேடசந்தூர் சாலை, சுள்ளெறும்பு,
திண்டுக்கல் மாவட்டம். ... எதிரி

| **குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்.** | **பெயர்** | **தந்தை/ கணவரின் பெயர்** | **இனம் அல்லது சாதி** | **தொழில்** | **இருப்பிடம்** | **வயது** |
| 1. | ராமசாமி | ராஜூ | இந்து | - | சுள்ளெறும்பு | 39/2016 |

| **நிகழ்வு** | **முறையீடு** | **கைது அல்லது முன்னிலை** | **பிணையின் பேரில் விடுதலை** | **விசாரணையின் தொடக்கம்** | **விசாணையின் முடிவு** | **தண்டனை அல்லது ஆணை** | **தாமதத்திற்கான விளக்கம்** |
|---|---|---|---|---|---|---|---|
| 20.11.2016 | 20.11.2016 | 21.11.2016 | 21.11.2016 (காவல் நிலைய பிணை) | 11.06.2026 | 13.07.2026 | விடுதலை | -- |

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ஆம் தேதியிட்ட Roc.No. 814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4) ன் படி</u>**

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட | |

| | | |
|---|---|---|
| | நாள் | – |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.08.2017 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | – |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 24.03.2025 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | எம்.பி.எண்.1/2026, 13.07.2026 ஆம் தேதியிட்ட கூடுதல் சாட்சி மனு அனுமதிக்கப்பட்டது. |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 11.06.2026 | 11.06.2026 |
| அ.சா.2 | 11.06.2026 | 11.06.2026 |
| அ.சா.3 | 11.06.2026 | 11.06.2026 |
| அ.சா.4 | 02.07.2026 | கு.வி.இல்லை |
| அ.சா.5 | 13.07.2026 | 13.07.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 31.07.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜாராகிய / ஆஜார்படுத்தப்பட்ட நாட்கள் | – |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | – |

இவ்வழக்கானது 23.08.2017 ஆம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 05.08.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் நிலை–2 **செல்வி.ஆர். நபிரா சப்ரின், எம்.எல்.,** அவர்கள் ஆஜாராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்

**திரு.D.கஜேந்திரன்,B.A.,L..L.B.,** அவர்கள் ஆஜாராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1) சத்திரப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.235/2016-ன் படி சார்பு ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு, எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச. பிரிவு 173 (2)-ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :** கடந்த 20.11.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில், பழனி – திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிந்தலவாடம்பட்டி குறிஞ்சி ஜின்னிங் மில் அருகில், இவ்வழக்கின் புகார்தாரர் TN 57 AW 4696 என்ற பதிவு எண் கொண்ட HERO SPLENDER PRO இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்க்காக சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி ராமசாமி TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட MARUTHI ALTO நான்கு சக்கர வாகனத்தை எதிர்திசையில் மேற்க்கிலிருந்து கிழக்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து புகார்தாரர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி புகார்தாரருக்கு உடலில் ஐந்து இடங்களில் கொடுங்காயங்களை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என சத்திரப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக **முதல் தோற்ற வழக்கு** எழுந்ததால், வழக்கானது கடந்த 23.08.2017 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானவுடன் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 207-ன் கீழ் வழக்கு ஆவணங்கள் அனைத்தும்

இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு, கடந்த 24.03.2025 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 338 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் விளக்கிக் கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே, இந்த வழக்கு சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4) அதன் அடிப்படையில், இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) சம்பவத்தைப் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாக திரு.சிவக்குமார் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சிகளாக திரு.ஜெயராஜ் அ.சா.2 ஆகவும், திரு.ரங்கன் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சியாக திரு.தனசேகரன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3–ன் மூலம் பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் கூடுதல் சாட்சியாக திரு.செல்லமுத்து அவர்கள் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், TN 57 AW 4696 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5** ஆகவும், TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆகவும், சிவக்குமாரின் காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகவும், சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் கடந்த 31.07.2026 ஆம் தேதி, கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் வினவியபோது, அவற்றை எதிரி "**பொய் சாட்சியம்**"

என்று கூறியதோடு, தனது தரப்பில் விசாரிக்க சாட்சி **"இல்லை"** என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அதேபோல், சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

7) அரசு தரப்பில், எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்களின் மூலமும், சான்றாவணங்களின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டியது அவசியம் என்றும் வாதிடப்பட்டது. ஆனால், எதிரி தரப்பில் அரசு தரப்பு சாட்சிகள் எவரும் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையிலோ, விபத்தை எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கரதையாகவோ வாகனத்தை ஓட்டி வந்து எதிரியின் கவனக்குறைவால்தான் நடந்தது என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை அரசு தரப்பு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :**

(i) கடந்த 20.11.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில், பழனி – திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிந்தலவாடம்பட்டி குறிஞ்சி ஜின்னிங் மில் அருகில், இவ்வழக்கின் எதிரி ராமசாமி TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட MARUTHI ALTO நான்கு சக்கர வாகனத்தை எதிர்திசையில் மேற்க்கிலிருந்து கிழக்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்தாரா ? என்பதும்,

(ii) கடந்த 20.11.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில், பழனி – திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிந்தலவாடம்பட்டி குறிஞ்சி ஜின்னிங் மில் அருகில், இவ்வழக்கின் எதிரி ராமசாமி TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட MARUTHI ALTO நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து, புகார்தாரர் ஓட்டிவந்த TN 57 AW 4696 என்ற பதிவு

எண் கொண்ட HERO SPLENDER PRO இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி புகார்தாரருக்கு உடலில் ஐந்து இடங்களில் கொடுங்காயங்களை ஏற்படுத்தினாரா என்பதும் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதும்,

(iii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன ? என்பதே ஆகும்.

9) **தீர்வு :** கடந்த 20.11.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில், பழனி – திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிந்தலவாடம்பட்டி குறிஞ்சி ஜின்னிங் மில் அருகில், இவ்வழக்கின் புகார்தாரர் TN 57 AW 4696 என்ற பதிவு எண் கொண்ட HERO SPLENDER PRO இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்க்காக சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி ராமசாமி TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட MARUTHI ALTO நான்கு சக்கர வாகனத்தை எதிர்திசையில் மேற்க்கிலிருந்து கிழக்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து புகார்தாரர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி புகார்தாரருக்கு உடலில் ஐந்து இடங்களில் கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்பதே அரசுத் தரப்பு குற்றச்சாட்டாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் வீரலப்பட்டிபிரிவில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வந்தேன் என்றும், தற்போது வேலைக்கு செல்வதில்லை என்றும், கடந்த 20.11.2014 ஆம் தேதி அன்று காலை 10.00, 10.30 மணி இருக்கும் என்றும், தான் பழனிக்கு வேலைக்கு செல்வதற்காக ஒட்டன்சத்திரம் – பழனி ரோட்டில் தனக்கு சொந்தமான TN 57 AW 4696 என்ற எண் கொண்ட ஸ்பிளெண்டர் இருசக்கர வாகனத்தில் மாட்டுப்பாதை குறிஞ்சி மில் அருகே ஒட்டன்சத்திரத்திலிருந்து பழனி நோக்கி சென்றபோது, தனக்கு எதிர் திசையில் ஒட்டன்சத்திரம் நோக்கி வந்த மாருதி காரை ஓட்டிவந்த ஓட்டுநர் காதில் போன் வைத்து பேசிக் கொண்டு வந்து என் மீது மோதிவிட்டார் என்றும், விபத்து ஏற்பட்டதில் தான் தூக்கி வீசப்பட்டு தனக்கு வலதுபக்க வலது கால், வலது கையில்

எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், விபத்தின்போது **ஆஜர் எதிரியை தான் பார்க்கவில்லை என்றும், தான் பழனியில் உள்ள ஆதித்யா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எதிரி ராமசாமிதான் தன் மீது கார் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாக சொன்னார் என்றும், தான் இன்றுதான் ஆஜர் எதிரியை நேரில் பார்க்கிறேன்** என்றும், எதிரியின் பெயர் மட்டும் தனது உறவினர் தனக்கு சொல்லி தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள புகார்தாரர் என்னும் இடத்தில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.1–ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, பொதுவாக 09.00 மணிக்கு எல்லாம் வேலைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான் என்றும், ஆனால் விபத்து நடந்த அன்று ஞாயிற்றுக்கிழமை, தனது மனைவிக்கு பிரசவம் ஆகியிருந்ததால் அவருக்கு வேண்டிய பொருட்கள் வாங்கிக் கொடுத்துவிட்டு 10.00 மணிக்கு மேல்தான் வேலை சென்றேன் என்றும், **தான் எழுத்துமூலமான புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, கைரேகை மட்டும் வைத்து கொடுத்தேன் என்றும், தனது அப்பா உறவுக்காரரிடம் சொல்லி புகாரை டைப் செய்து கொடுத்தார்** என்றும், போலீசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவத்தன்று பகல் 01.00 மணி இருக்கும் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல என்றும், இழப்பீடு கோரிய வழக்கிற்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து ரயில்வேயில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், கடந்த 20.11.2016 ஆம் தேதி அன்று தனது மகனான அ.சா.1 வேலைக்கு செல்வதற்காக அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் மாட்டுப்பாதை குறிஞ்சி மில் அருகே செல்லும்போது, அ.சா.1 மீது எதிர் திசையில் வந்த கார் மோதிவிட்டதாக மில்லில் வேலை செய்பவர்கள் தனக்கு தகவல் சொன்னார்கள்

என்றும், தகவலை பெற்றுக் கொண்டு தான் சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றும், அங்கு தனது மகனுக்கு கையிலும், காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது என்றும், சம்பவ இடத்திலிருந்து தானும், தன்னுடன் சிலரும் அ.சா.1–ஐ பழனியில் உள்ள ஆதித்யா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம் என்றும், அதன்பின்னர் அ.சா.1–ஐ மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூரில் உள்ள கங்கா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், **ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது** என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2–ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **விபத்து நடந்த விவரம் தகவல் சொல்லித்தான் தனக்கு தெரியும் என்றால் சரிதான் என்றும், சம்பவ இடத்தில் இருந்து ஒருவர் இருசக்கர வாகனத்தில் வந்து தன்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார் என்றும், சம்பவத்தை குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13) மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், தான் சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி, நாள், மாதம் எதுவும் சொல்ல தெரியவில்லை என்றும், ஒரு நாள் மதியம் 02.00 மணியளவில் மாட்டுப்பாதை குறிஞ்சி மில் அருகே போலீசார் வரைபடம் வரைந்துக் கொண்டு இருந்தார்கள் என்றும், அங்கு தானும், கணேசன் என்பவரும் இருந்தோம் என்றும், போலீசார் தன்னை சாட்சியாக கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள் என்றும், தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், தன்னுடன் கணேசன் இருந்தார் என்றும், ஆனால் அவர் கையொப்பம் செய்து கொடுத்தாரா என்று தனக்கு தெரியவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3–ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, தான் கையெழுத்து செய்து கொடுத்தபோது **கையெழுத்து செய்து கொடுத்த தாளில் எழுதப்பட்டு இருந்ததா என்றால் பகுதி எழுதியும், பகுதி எழுதாமலும் இருந்தது** என்றும், தானும், புகார்தாரரும் ஒரே ஊர் சேர்ந்தவர் என்பதால்

அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து குறிஞ்சி மில்லில் வாட்மேனாக வேலை செய்து வந்தேன் என்றும், தற்போது பணி ஓய்வு பெற்று வீட்டில் இருந்து வருகிறேன் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம், நாள் ஞாபகமில்லை, ஒரு நாள் குறிஞ்சி மில் அருகே நான் வேலையில் இருந்தபோது டம் என்று சத்தம் கேட்டது என்றும், தான் சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டு கூட்டமாக இருந்தது என்றும், **வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது** என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 பிறழ்சாட்சியாகக் கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**15)** இவ்வழக்கில் கூடுதல் சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், தான் தற்போது சத்திரபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தனக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் பரமசிவம், சார்பு ஆய்வாளர் பொன்னுச்சாமி ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 20.11.2016 ஆம் தேதி 11.00 மணிக்கு சத்திரபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் பரமசிவம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, பழனி ஆதித்யா தனியா மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில், அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜெயக்குமார் மகன் சிவக்குமார் என்பவரிடம் புகாரை பெற்று 13.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.235/2016 பிரிவு 279, 337 இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில், பின்பு அன்றைய தினம் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தனசேகரன், கணேசன், ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு சம்பவ இடத்தில் சாட்சிகள் சிவக்குமார், ஜெயராஜ், ரெங்கன், மாசி ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு 20.11.2016 ஆம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 57 AW 4696 Hero splender Pro என்ற பதிவு எண் கொண்ட இருசக்கரவாகனத்தையும், TN 58 U 8103 மாருதி ஆல்டோ என்ற பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தையும் வாகன தணிக்கைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார் என்றும், பின்பு நிலையம் வந்து ஆஜரான எதிரியை அன்றைய தினம் கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார் என்றும், பின்பு சார்பு ஆய்வாளர் பொன்னுச்சாமி அவர்கள் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 57 AW 4696 Hero splender Pro என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தையும், TN 58 U 8103 மாருதி ஆல்டோ என்ற பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தையும் தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வி அவர்களிடம் சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட சிவக்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் ராய் வில்சன் ஆம்ஸ்ட்ராங் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு சிவக்குமாருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்கள் என மருத்துவர் சான்று அளித்ததன் பேரில் இவ்வழக்கில் பிரிவு 279, 337 இ.த.ச.விலிருந்து 279, 338 இதசவாக சட்டமாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கில் முதல்கட்ட புலன்விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பரமசிவம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 10.01.2017 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 338 ஆகிய

பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** அ.சா.5 தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், சம்பவ இடம் சென்று புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல என்றும், புகார்தாரரிடமிருந்து புகார் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் கைரேகை மட்டும் பெற்றுக் கொண்டு காவல் நிலையத்தில் வைத்து காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்ப பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கில் உள்ள சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க பட்டியல் சாட்சிகளாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கில் சேர்க்கப்பட்டு இருந்த பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கிற்கு சம்பந்தமான சாட்சிகள், வாக்குமூலங்கள், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர் மற்றும் பல ஆவணங்களை எதிரிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19)** இந்த வழக்கில் அ.சா,1 தனது சாட்சியத்தில் விபத்தின் இ.த.ச. 279, 338, 304A ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் இரு சாரம்சங்கள் நிரூபிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவை விபத்தை ஏற்படுத்திய எதிரி அடையாளம் காட்டப்பட்டு இருக்க வேண்டும் மற்றொன்று எதிரி, தான் ஓட்டிவந்த வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று நிரூபிக்கப்பட்டு இருக்க வேண்டும். தற்போது இந்த வழக்கில் மேற்சொன்ன இரு சாரம்சங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலித்து பார்க்கையில், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி அவர் ஓட்டி வந்த வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்தார் என்று அரசு தரப்பு சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரிக்கும் எதிரி செய்த குற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பை நிரூபிப்பது என்பது இவ்வழக்கின் முக்கிய அம்சம் ஆகும். இவ்வழக்கில்

எதிரிக்கும் குற்றத்திற்குமான தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்தபோது, இவ்வழக்கின் புகார் தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தின் போது தான் எதிரியை பார்க்கவில்லை என்றும் எதிரியை நீதிமன்றத்தில் வைத்து இன்று தான் பார்ப்பதாகவும், மேலும் எதிரி ராமசாமியே அ.சா.1 ன் மீது கார் மோதியதாக அ.சா.1 ரிடம் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியத்தில் இருந்து எதிரியை சம்பவத்தின் போது அ.சா.1 பார்க்கவில்லை என்பதும், எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தகவல் சொல்லித்தான் சம்பவ இடம் சென்றதாகவும் சம்பவ இடத்தில் இருந்து ஒருவர் இருசக்கர வாகனத்தில் வந்து தன்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றதாகவும் சம்பவத்தை குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்த வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன காரணங்களால் இவ்வழக்கின் எதிரிக்கும் இந்த குற்றத்திற்குமான தொடர்பை, அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், விபத்து ஏற்பட்டு, அதில் சிவக்குமாருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால் யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து நடந்தது என்று அரசு தரப்பு சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததால், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ வாகனத்தை இயக்கியதாகவோ, விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடந்தது என்றோ அரசு தரப்பு சாட்சிகள் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.5 ஆன சார்பு ஆய்வாளரின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.8 வரையிலான அரசு தரப்பு

சான்றாவணங்களை வைத்து மட்டும் இவ்வழக்கில் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**21)** முடிவாக, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(i) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** எதிரியின் பிணையப் பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு, மேற்படி எதிரியின் பிணையப் பத்திரம் தானாகவே ரத்தாகும் எனவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.14 18:18:20 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

1. **அரசு தரப்பு சாட்சிகள்:-**

| சாட்சியின் வரிசை | சாட்சியின் பெயர் | எவ்வகையான சாட்சி |
|---|---|---|
| அ.சா.1 | சிவக்குமார் | புகார்தாரர் |
| அ.சா.2 | ஜெயராஜ் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.3 | தனசேகரன் | மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | ரங்கன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.5 | செல்லமுத்து | புலன் விசாரணை அதிகாரி (கூடுதல் சாட்சி) |

2. **<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| **சான்றாவணங்களின் வரிசை** | **சான்றாவணங்களின் விபரம்** | **குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | TN 57 AW 4696 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | TN 58 U 8103 என்ற பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | சிவக்குமாரின் காயச்சான்று | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | சட்டமாறுதல் அறிக்கை | அ.சா.5 |

3. **<u>சான்று பொருள் :</u>** இல்லை.

4. **<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை.

5. **<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.14 18:18:29 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

**குறிப்பு :**

1) தீர்ப்புரையின் நகல் திண்டுக்கல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.
3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.